16.03.2026 OS.No.82/2024 PW2 Name :.ரமேஷ்

குறுக்கு விசாரணை

1. எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க சாட்சி சம்மன் எதுவும் வரவில்லை. சுரேஷ் சொல்லிதான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். முதல் விசாரணை பிரமாண பத்திரத்தில் சுரேஷ் என்னுடைய பால்யநண்பர் என்ற விவரத்தை கூறவில்லை. சுரேஷ் பேன்ஸிகடை வைத்துள்ளார். அதை தவிர லேவாதேவி தொழில் எதுவும் செய்வதில்லை. சுரேஷ் போட்டுள்ள வேறு வழக்குகள் பற்றி எனக்கு தெரியாது.
2. பிற வழக்குகளுக்கு சுரேஷிற்கு ஆதரவாக சாட்சி கூறுகிறேன் என்றால் அவ்வாறு இல்லை. இந்த வழக்கு தவிர வேறு வழக்குகளில் சுரேஷிற்கு ஆதரவாக சாட்சி கூறவில்லை. பிரதிவாதியை எனக்கு தெரியும். பிரதிவாதியின் மகன் என்னிடம் வேலை செய்த வகையில் பிரதிவாதியை எனக்கு தெரியும். அந்த விவரத்தை முதல் விசாரணை பிரமாண பத்திரத்தில் கூறவில்லை. சுரேஷ் என்ன நிவாரணத்திற்காக வழக்கு போட்டுள்ளார் என்பது எனக்கு தெரியாது.
3. வழக்கு சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. சுரேஷ்யிடம் பிரதிவாதி கடன் பெற்று அதை திருப்பி செலுத்தியுள்ளார் என்றால் அவ்வாறு இல்லை. அசல் மற்றும் வட்டியை பிரதிவாதி திருப்பி செலுத்தியுள்ளார் என்றால் அவ்வாறு எதுவும் கொடுக்கவில்லை. வாதிக்கு அவ்வாறு அனுப்பிய பண விவரங்கள் எனக்கு நேரிடையாக தெரியாது. ஆவணம் பத்திர பதிவு அலுவலர் அலுவலகத்தில் தான் எழுதபட்டது.

4. அடமான கடன் பத்திரம் என கூறி பிரதிவாதியை ஏமாற்றி மோசடியாக கிரைய ஒப்பந்தம் எழுதியுள்ளோம் என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தத்தை நான் பார்த்துள்ளேன். பிரதிவாதி ஆவணத்தில் வலதுபுறம் கையெழுத்து போட்டுள்ளார். இடதுபுறம் சுரேஷ் போட்டுள்ளார். அவ்வாறு எந்த ஆவணமும் பெறபடவில்லை என்று சொன்னால் சரியல்ல. எவ்வளவு காலக்கெடு எழுதபட்டது என்ற விவரம் எனக்கு தெரியும்.

5. 18 மாதம் என்பது பிரதிவாதிதான் கூறியது. பணம் வாங்க வேண்டியவர் கால அவகாசம் கேட்கவேண்டியது கிடையாது என்றால் சரியல்ல. சொத்திற்கான மூல ஆவணங்களை பார்த்ததில்லை. வழக்கிற்கு முன் பிரதிவாதிக்கு அறிவிப்பு கொடுக்கபட்ட விவரம் எனக்கு தெரியும். அதுபற்றிய விவரம் தெரியாது. வழக்கு கிரைய ஒப்பந்தம் மோசடியானது என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 16/03/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.03.16 16:43:45 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.